குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.56/2024

ம.சா. 1

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20–ம் தேதி சனி கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிக்குமார் | தொழில் | |
| தந்தை பெயர் | கந்தசாமி | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 10.59 மணி,

Complainant Ravikumar present. Accused Sasiskumar present. Advocate Mr.Ramprakash present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) கந்தசாமி பிளை ஆஸ் பிரிக்ஸ் என்ற நிறுவனம் சிமெண்ட் கற்கள் தயாரிக்கும் நிறுவனம் ஆகும். சிமெண்ட் கற்கள் தயாரிக்க சல்லி எம்சான்ட் போன்ற பொருட்கள் வாங்கி தான் தயாரிக்க முடியும். பிளை ஆஸ் பிரிக்ஸ் தொழில் வேறு கிரசர் குவாரி தொழில் வேறு என்றால் சரி. என்னுடைய கிரசரில் இருந்து எம்சாண்ட், பிளை ஆஸ் போன்றவற்றை பெறுவதாக சொல்லியுள்ளேன். கிரசரின் உரிமையாளர் நான் தான். மேற்படி உரிமைக்கான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். குவாரியில் இருந்து எடுக்கப்படும் எம்சாண்ட் பி சாண்ட் ஆகியவற்றிற்கான தொகையை அரசுக்கு செலுத்த வேண்டும் என்றால் சரி தான். அதற்கான கோப்புகளை பராமரித்து வருகிறேன்.

2) 16.01.2024 ம் தேதி ஆஜர் எதிரி என்னிடம் இருந்து ரூ.2 லட்சம் மதிப்பிற்குண்டான பிளை ஆஸ், எம்சாண்ட் ஆகியவற்றை வாங்கியதாக கூறியுள்ளேன். ஆஜர் எதிரி என்ன என்ன பொருள் எவ்வளவு அளவு வாங்கினார் என்றால் 2–3 வருடங்களாக தேவைக்கு தகுந்தார் போல் வாங்கினார். பிளை ஆஸ் கல் ஒன்று ரூ.4/– ஒரு நடைக்கு 10000 ம் கல் என்ற அடிப்படையில் எடுப்பார். ரூ.2 லட்சம் மதிப்பிற்கான பிளை ஆஸ் கல் 50000 ம் எண்ணிக்கையில் எடுத்தார். மேற்படி பரிவர்த்தனைக்கான ஆவணம் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் தயாராக உள்ளேன். நான் தாக்கல் செய்யாத பட்சத்தில் எனக்கு எதிரான அனுமானத்தின் ஆட்சேபனை ஏதும் இல்லை.

3) ஆஜர் எதிரி என்னிடம் கொடுத்த கடனுறுதி சீட்டை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வட்டி நிலுவைத் தொகை என்றால் கணக்கு பார்க்கவில்லை. அசல் தொகைக்கு தான் காசோலை கொடுத்தார். வட்டி தொகை ஏதும் சேர்க்கவில்லை. இவ்வழக்கு காசோலையை ஆஜர் எதிரி அழைத்து வந்த நபர் எழுதினார். இவ்வழக்கு காசோலை எங்கு எப்போது யாரால் பூர்த்தி செய்யப்பட்டது என்றால் என்னுடைய கடையில் வைத்து எழுதப்பட்டது. இவ்வழக்கு காசோலையில் ஆஜர் எதிரியின் கையொப்பம் ஒரு பேனாவினாலும், ரூ.2,00,000/- வேறு பேனாவினாலும் மற்ற விபரங்கள் வேறு பேனாவினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) ஆஜர் எதிரி முதலில் காசோலையில் கையொப்பம் செய்து கொடுத்தார் பிறகு வரவு செலவுகளை கணக்கு பார்த்து தொகையை பூர்த்தி செய்து கொடுத்தார். எனது வழக்கறிஞர் அறிப்பு முறையாக ஆஜர் எதிரிக்கு சார்வு செய்யபடவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி கந்தசாமி குவாரியில் எம்சாண்ட் வாங்கி விற்பனை செய்யும் தொழில் செய்துவருகிறார் என்றால் சரி. அதற்காக பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை ஆஜர் எதிரியிடம் இருந்து பிணையாக வாங்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி தற்போது வேறு குவாரியில் தொழில் செய்து வருவதால் தொழில் போட்டிக்காக அவரிடம் இருந்து துர்லாபம் அடைய வேண்டி ஏற்கனவே அவர் கொடுத்த பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை வைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5) ஆஜர் எதிரி நிலுவை தொகை எனக்கு ஏதும் கொடுக்கபட வேண்டியது இல்லை என்றாலும் அதற்கான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதாலும் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 11.56 மணி,

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.